# ஏரெழுபது நூலின் நிலவியல் பண்பாடு

***கா. தசரதன்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழ் உயராய்வுத் துறை
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

***முனைவர் இரா. செல்வராஜ்***
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383082

***ஆய்வுச் சுருக்கம்***
*பண்டைய காலத்தில் தமிழர்கள் நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பகுத்தனர். நிலங்களின் தன்மைக்கேற்ற உணவு உற்பத்தி, பழக்கவழக்கங்கள், விழாக்கள், வாழ்க்கை முறை, சடங்குகள் போன்றவை தோன்றி வாழ்வியலில் பண்பாட்டுக் கூறுகளாக நிலைபெறுகின்றன. ஐவகை நிலங்களுள் மருத நிலமானது சமவெளிப் பகுதிகளாக வேளாண்மை செய்து, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளக் களமாக அமைகின்றது. உழவுத் தொழிலான வேளாண்மைத் தொழிலைச் செய்பவர்கள் வேளாளர்கள் ஆவர். கி. பி 12 ஆம் நூற்றாண்டில் கம்பரால் ஏரெழுபது என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது. சோழர்கள் காலத்தில் வேளாளர்களின் நிலை மிகவும் பின்தங்கியதாக இருந்தது. அத்தகைய சமூகச்சூழலில் கம்பர் ஏரெழுபது நூலை இயற்றியுள்ளார். வேளாண் கருவிகள், வேளாளர் சிறப்பு, சோழர்கால வேளாளர்களின் நிலை ஆகியவற்றைப் பற்றி ஏரெழுபது நூலில் கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வேளாண் தொழில் வயலும் வயல் சார்ந்த இடமான மருதநிலத்தின் நிலவியல் பண்பாட்டில் முதன்மையாகவும், உலக உயிர்களுக்கு அடிப்படையாகவும் அமையும் முறைமைகளை ஏரெழுபது நூலின்வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *ஏரெழுபது, வேளாண்மை, வேளாளர், காவிரியாறு, மருதநிலம், பண்பாடு*

**முன்னுரை**

*உலகில் வாழும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். உழவுத் தொழில் செய்து உணவு உற்பத்தி செய்பவர்கள் உழவர்கள் என்றும் வேளாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். வேளாண் தொழில் செய்வதற்கு அடிப்படையாக அமைவது நிலமும், பொழுதுகளும் ஆகும். தொல்காப்பியம் இதனை முதற்பொருள் என்று குறிப்பிடுகின்றது. வயலும் வயல் சார்ந்த இடமான மருத நிலப்பகுதி மிகுதியான சமவெளிப் பகுதிகளைக் கொண்டு உழவுத் தொழில் செய்ய ஏற்றதாக உள்ளது. ஏரெழுபது என்னும் நூல் வேளாண் தொழில், வேளாளர்களின் நிலை, வேளாண் கருவிகள், காவிரியாற்றின் சிறப்பு, நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற மருதநிலத் தொழிலான வேளாண்மையைப் பற்றி விளக்குகின்றது. அதன் அடிப்படையில் ஏரெழுபது என்னும் நூலில் கூறப்பட்டுள்ள மருதநில வேளாண் தொழில், வேளாண் கருவிகள், வேளாளர்கள் பற்றிய செய்திகளை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**நிலவியல் பண்பாடு**

*ஒரு இடத்தில் வாழ்கின்ற மக்கள் நிலம் சார்ந்த மொழி, பழக்க வழக்கம், இறை நம்பிக்கை,*

விழாக்கள், தொழில் போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இக்கூறுகள் நிலைபெறும் பொழுது அந்நிலம் சார்ந்த மக்களின் பண்பாட்டுக் கூறுகளாக மாறுகின்றன. பண்படுவது பண்பாடு. பண்படுதல் சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்தியத் தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்தியவுள்ளத்தை பண்பட்ட வுள்ளமென்றும் சொல்வது வழக்கம் (ஞா.தேவநேயன், 1966, ப.6) என்று பாவாணர் பண்பாட்டிற்கு விளக்க மளிக்கின்றார். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மை நிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும் (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், 1980, ப.10) என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுகின்றார்.

பண்பாட்டுக் கூறுகளை நிலமும் அந்நிலம் சார்ந்த கனிம வளங்கள், மழையளவு, காலநிலை, மரம், செடி, விலங்கு, பறவை போன்றவை தோற்றுவிக்கின்றன. இவைகளை நிலவியல் பண்பாடுக் கூறுகள் என்று கூறலாம். பண்டைத் தமிழர்கள் நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பகுத்தனர். குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களின் வளம்குன்றிய நிலையே பாலை நிலமாகும் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. (சிலம்பு 11 : 64-66) வயலும் வயல்சார்ந்த இடமான மருதநிலம் உழவுத்தொழில் மேற்கொள்ளும் சமவெளிப் பகுதியாகும். மருதநிலத்திற்கான சிறுபொழுதுகள் வைகறை, விடியல் ஆகும். அறுவகைப் பொழுதுகளும் பெரும்பொழுதுகளாக அமைகின்றன. இந்நிலவியல் சார்ந்த பண்பாட்டின் அடிப்படையாக உழவுத் தொழிலான வேளாண்மைத் தொழில் அமைகிறது.

## வேளாண்மை

உணவு உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலினை வேளாண்மை என்று குறிப்பிடுவர். வேளாண் மக்களுக்கு உணவினை உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலே முதன்மையானதாகும். தொல்காப்பியர் உழவுத்தொழில் செய்பவர்களை வேளாண்மாந்தர் என்கிறார். அவர்களுக்கு உழவுத்தொழில் அல்லாமல் வேறு தொழில் இல்லை என்பதனை,

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லெனெ மொழிப பிறவகை நிகழ்ச்சி**
**(தொல் (பொருள்) - 1581)**

என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது. திருவள்ளுவர் உழவுத்தொழில் பற்றி உழவு என்னும் அதிகாரத்தை இயற்றியுள்ளார். வேளாண்மை என்னும் சொல்லைத் திருவள்ளுவர் பிறருக்கு உதவி செய்தல் என்னும் பொருளிலேயே பயன்படுத்துகிறார். இதனை,

**இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லம் விருந்துஓம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு**
**(திருக்குறள் - 81)**

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**
**(திருக்குறள் - 212)**

**தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னுஞ் செருக்கு**
**(திருக்குறள் - 613)**

என வரும் திருக்குறள்களால் அறியலாம். ஆகவே வேளாண்மை என்னும் சொல் உழவுத்தொழில் செய்யும் மக்களைக் குறித்து, பின்பு பிறருக்கு உதவி செய்தல் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, வேளாண்மை என்னும் சொல்லுக்கு உணவுப் பொருளை உற்பத்தி செய்து பிறருக்கு வழங்குதல் என்னும் அடிப்படையில் பொருள் அமைகிறது.

## நீர்வளம்

நீரின்றி அமையாது உலகு என்னும் திருவள்ளுவரின் கூற்றிற்கேற்ப ஒரு நாட்டின் நீர்வளத்தினைப் பொருத்தே வேளாண்தொழில் அமையும். குடகு பகுதியில் தோன்றி சோழ நாட்டை வளப்படுத்துவது காவிரி ஆறாகும். சோழ நாட்டை வளமாக்கும் காவிரி ஆறானது பல சிறப்புகளைக் கொண்டுள்ளது. கம்பரால் எழுதப்பட்ட ஏரெழுபது நூலில் காவிரி

ஆற்றினைப் பொய்க்காமல் நீர் பெருகிவரும் காவிரி, வளமான காவிரி, வளம் சேர்க்கும் காவிரி என்று பலவாறு அளவில்லாத பொன்னையும், மணிகளையும் தன்னுடைய இரு கரைகளிலும் ஒதுக்குகின்ற சிறப்பினை உடையது காவிரியாறாகும். இதன் காரணமாக,

*..கனகமு மணிகளும்*
*வரம்பில் காவிரி குழம்பினிற் கொழிக்குஞ்*
*சோழ மண்டல மிதற்கிணை யாமென*
*சொல்லு மண்டலஞ் சில்வதற் கில்லையே*
*(ஏரெழுபது பாயிரம் - 4)*

என்று காவிரி ஆற்றின் சிறப்பினை ஏரெழுபது விளக்குகின்றது. உலக மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் காவிரி ஆறு பெருக்கெடுத்து சோழ நாட்டை வளப்படுத்துகிறது. இக்கருத்தினை,

*..*
*திளைத்துவருஞ் செழும்பொன்னித் திருநாடர் உழுநுகத்தில்*
*துளைத்துளை போலுதவந் துணையுளதோ சொல்லீரே- (ஏரெழுபது பாடல் எண் - 7)*

என வரும் பாடல் விளக்குகின்றது. மேலும், சங்குகளையும், இரத்தினக் கற்களையும், இனிமை நிறைந்த பலாச்சுளைகளையும், மலர்களையும் கொண்டுவந்து சோழநாட்டில் காவிரியாறு சேர்க்கின்றது. இத்தகைய வளங்களைக் கொண்ட காவிரி ஆற்றின் சிறப்பினை விளக்கும் பாடல் வருமாறு:

*வளைகளையும் மணிகளையும் மலர்களையும் வரும்பலவின்*
*சுளைகளையுங் கொடுகரைக்கே சொரிபொன்னித் திருநாடர்- (ஏரெழுபது பாடல் எண் - 45)*

என்னும் பாடல் விளக்குகிறது. அவ்வகையில் காவிரியாறுசோழநாட்டுவேளாண்தொழிலின் முக்கியமான நீர்வளமாக அமைகிறது.

## வேளாளர் சிறப்பு

உழவர்கள் சேற்றில் இறங்கினால்தான் நாம் சோற்றில் கைவைக்க முடியும். அத்தகைய உழவுத் தொழில் செய்பவர்கள் வேளாளர்கள் ஆவர். வேளாளர்கள் உணவுப் பொருள் உற்பத்தி செய்யவில்லை என்றால் உலகில் எவ்விதச் செயல்களும் நடைபெறாது. அத்தகைய வேளாளர்கள் மழைமேகம் போன்ற வேளாளர்கள், உலகிற்கு உதவும் வேளாளர்கள், பெயரை நிலைக்கச் செய்யும் வேளாளர்கள் என்று பலவாறாக ஏரெழுபது நூலில் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். வேளாளார்களின் சிறப்பினை விளக்கும் பாடல் அடிகள் வருமாறு:

*கங்கைபெறுங் காராளர் .. (ஏரெழுபது (பாயிரம்) - 1) - கங்கையின் குலமரபில் தோன்றியவர்*
*கங்கைகுலா திபர் ..(ஏரெழுபது (பாயிரம்) - 3)*
*மேழித்தேவர் ..(ஏரெழுபது (பாயிரம்) - 7) - ஏர்க் கலப்பையைக் கொண்டவர்கள்*

என வரும் பாடல் அடிகளில் வேளாளர்களின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

சிவன், திருமால், பிரம்மன் ஆகிய முப்பெரும் தேவர்கள் இவ்வுலகைக் காக்கும் வலிமையைக் கொண்டிருக்கவில்லை. அத்தகைய வலிமையைக் கொண்டவர்களாக விளங்குபவர்கள் வேளாளர்கள். இதனை,

*ஆழித்தேவர் கடலானார் அல்லாத்தேவர் அம்பலத்தார்*
*ஊழித்தேவர் தாங்குடி உலகங்காக்க வல்லாரோ*
*வாழித்தேவர் திருமக்கள் வையம்புரக்கும் பெருக்காளர்*
*மேழித்தேவர் பெருமைக்கு வேறேதேவர் கூறேனே*
*-(ஏரெழுபது (பாயிரம்) - 7)*

என்னும் பாடலில் கம்பர் விளக்கியுள்ளார். உழவுத்தொழில் செய்யும் கலப்பையைக் கொண்ட வேளாளர்களைத் தவிர வேறு தேவர்களைப் பாடமாட்டேன் என்று கம்பர் கூறுகிறார். அழுகின்ற குழந்தைக்கு பால் கொடுத்து பசியாற்றும் தாயைப்போல உலக உயிர்களுக்கெல்லாம் பசியைப் போக்கக்கூடிய உணவினை உற்பத்தி செய்பவர்கள் வேளாளர்களாவர்.

*அழுங்குழவி கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கும்*
*எழுங்கருணைப் பெருக்காளர் எளியரோ யாம்புகழ*
*உழுங்கொழுவிற் கருவீரி யுலகமுதற் கருவாகச்*
*செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ்*
*செய்வானேல் -(ஏரெழுபது (பாயிரம்) - 9)*

என வரும் பாடலில் தாயைப்போல உலக உயிர்களுக்கு உணவளிப்பவர்கள் வேளாளர்கள் என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

சிவபெருமான் அழிக்கும் தொழிலை மேற்கொண்டு தில்லையில் கூத்தாடுகின்றார்.

திருமால் சக்கராயுதத்தைக் கையில் ஏந்து பாற்கடலில் பள்ளிகொண்டுள்ளார். உலகின் அழிவுக்காலத்தில் மீண்டும் உயிர்களை பிறப்பிக்க பிரம்மன் வாழ்கிறார். ஆனால் அவர்களால் இவ்வுலகத்தைக் காக்க இயலாது. உழுகருவிகளைக் கொண்டு உணவு உற்பத்தி செய்யும் வேளாளர்களே உலகினைக் காக்கும் திறன் கொண்டவர்கள் ஆவர்.

## வேளாண்தொழிலும் கருவிகளும்

உழவுத் தொழிலுக்கு அடிப்படையாக அமையும் அலப்படை, மேழி, ஊற்றாணி, நுகத்தடி, பூட்டாங்கயிறு, கொழு, தாற்றுக்கோல், மண்வெட்டி, எருக்கூடை, நெல் அளக்கும் கூடை, அரிமிதிகோள் போன்ற உழவுத்தொழில் கருவிகள் பற்றி கம்பர் விளக்குகின்றார்.

***அலப்படை- நீண்ட வாள்கட்டை (ஏரெழுபது - 3)***
***மேழி - கலப்பையின் கைப்பிடி (ஏரெழுபது - 4)***
***ஊற்றாணி - கலப்பையினையும் ஏர்க்காலினையும் இணைப்பது (ஏரெழுபது - 5)***
***நுகத்தடி- மாட்டின் கழுத்தில் இணைக்கப்படும் கலப்பையின் கருவி (ஏரெழுபது - 6)***
***பூட்டாங்கயிறு - நுகத்தடியில் மாட்டைக் கட்டும் கயிறு (ஏரெழுபது - 9)***
***கொழு - கலப்பையின் நுனி (ஏரெழுபது - 11)***
***தாற்றுக்கோல் - உழவுமாடுகளைத் துரிதப்படுத்தப் பயன்படும் குச்சி (ஏரெழுபது - 13)***

அரிமிதிகோல் - நெற்கதிர்களில் கடைசியாக உள்ள நெல்மணிகளைப் பிரித்தெடுக்கப் பயன்படும் கோல் (ஏரெழுபது - 55)

உழவுமாடுகளைக் கொண்டு ஏர்த்தொழில் செய்து உணவு உற்பத்தி செய்பவர்கள் வேளாளர்கள். வானம் மும்மாரி பெய்தாலும் உலக மக்களின் செழிப்பு உழவுத் தொழிலுக்கு பயன்படும் எருதுகளின் மூலம் தோன்றும் என்று கம்பர் விளக்கியுள்ளார் (ஏரெழுபது - 14). மேலும்அந்தணர்வேள்விகள்சிறப்படையவும், படைகளில் உள்ள யானைகள் வலிமை அடையவும் காரணமாக இருப்பது உழவு எருதுகள் ஆகும். எருதுகள் இருந்தால்தான் ஏர்பூட்டி வயலை உழவுசெய்து உணவுப்பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

உழவு செய்யும்பொழுது மாடுகளை வேகமாக ஓட்டுவதற்கு தாற்றுக்கோல் எனப்படும் குச்சியைப் பயன்படுத்துவர். தாற்றுக்கோலின் சிறப்பினை,

***வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்***
***பைங்கோல் முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்***
***பொஙோதைக் கடற்றானைப் போர்வேந்தர் நட்த்துபெருஞ்***
***செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்குஞ் சிறுகோலே***
***- (ஏரெழுபது - 13)***

என வரும் ஏரெழுபது பாடல் விளக்குகிறது. வேளாளர்கள் பயன்படுத்தும் தாற்றுக்கோல் தான் அரசன் செங்கோல் கொண்டு ஆட்சி செய்ய அடிப்படையாக அமைகின்றது.

வேளாளர்களின் இவ்வுழவுத் தொழிலைப் பற்றிய பாடல் வருமாறு:

***ஏராலே சேறாக்கி யெருவாலே கருவாக்கி***
***நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றிக்***
***காராலே காவேரி நதியாலே காசினியில்***
***ஆராலே பசிதீர்வார் அகலிடத்திற் பிறந்தோரே***
***- (ஏரெழுபது - 14)***

என்னும் பாடலில் ஏர்க்கலப்பையைப் பயன்படுத்தி வயல்களை உழுது சேறாக்கி, நாற்றங்காலில் இருந்து பறித்துக் கொண்டுவந்த பயிர்களை நடவு செய்வர். பயிர்களுக்குத் தேவையான நேரத்தில் களைஎடுத்து நன்றாக காத்து அறுவடையை மேற்கொள்வர். அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை வறியவர்களுக்கு வழங்கியுள்ளனர் (ஏரெழுபது - 51)

## வேளாளர்களின் நிலை

தங்களின் கடின உழைப்பால் அறுவடை செய்த பொருள்களை வேளாளர்கள் தங்களுக்காக எடுத்து வைக்க மாட்டார்கள். தாங்கள் வயலில் உற்பத்தி செய்த பொருள்களை அந்தணர், அரசர், புலவர், வறியவர் என அனைவருக்கும் அளந்து கொடுத்துவிட்டு, பின்பு களத்தில் உள்ள நெற்கதிர்களில் உள்ள நெல்மணிகளைச் சேகரித்து அதனைப் பயன்படுத்திக் கொள்வர். இத்தகைய வேளாளர்களின் நிலையினை,

***தளர்ந்தவுயி ரீத்தனைக்குந் தாளாள் ரெண்டிசையும்***
***வளர்ந்தபுகழ்ப் பெருக்காளர் வளமையா ருரைப்பாரே***
***அளந்துலக மனைத்தாளும் அர்சர்வே தியர்புலவர்***

***களந்துவைக்க வையுகுத்த் கல்லறைக ளுண்பாரேல்***
***-(ஏரெழுபது - 14)***

*என வரும் பாடலில் கம்பர் விளக்கியுள்ளார். உற்பத்தி செய்த பொருள்களுள் முதல்தரப் பொருள்களை விற்றுவிட்டு, கடைசியாக உள்ள பொருள்களையே வேளாளர்கள் பயன்படுத்துகின்றனர்.*

*வேளாண் தொழில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துள்ளதை ஏரெழுபது நூலில் உள்ள பாடல்கள் விளக்குகின்றன. பிறப்பினடிப்படையில் வேறுபாடு கற்பித்த மனுநீதி நூல் சிறக்க வேண்டுமென்று (ஏரெழுபது (பாயிரம்) - 3) கம்பர்கூறுகின்றார். ஆகவே அந்தணர், அரசர், வணிகர் ஆகியோருக்கு அடுத்த நிலையிலேயே உழவுத்தொழில் செய்யும் வேளாளர்கள் இருந்துள்ளனர். இதன் காரணமாகவே வேளாளரின் சிறப்புகளைக் கூறும் பொழுது மற்றைய மூவருடன் ஒப்பீட்டு உயர்வாகக் கூறுகிறார்.*

***தொழுங் குலத்திற் பிறந்தாலென் சுடர்முடி மன்னவராகி***
***எழுங்குலத்திற் பிறந்தாலென் இவருக்குப்பின் வணிகரெனுஞ்***
***செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடைய ரானாலென்***
***உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே***
***- (ஏரெழுபது பாயிரம் - 4)***

*இப்பாடலில் அந்தணர், அரசர், வணிகருடன் வேளாளரின் தொழில் ஒப்பிடப்பட்டு சிறப்பிக்கப்படுகிறது. மற்றவர்களால் வணங்கப்படும் நிலையில் உள்ளவர்கள் அந்தணர்கள். அரசாட்சி செய்து மக்களை வழிநடத்துபவர் அரசர். ஓரிடத்திலுள்ள பொருள்களை மற்றோர் இடத்திற்கு கொண்டுசெல்பவர் வணிகர். ஆனால் இச்செயல்கள் நடைபெற அடிப்படையாக வேளாளர்கள் செய்யும் உழவுத்தொழிலானது அமைகின்றது.*

*ஔவையாரிடம் மந்திரிப் பதவிக்கு உரியவர்கள் யார் என்று அரசர் கேட்டார். அதற்கு அந்தணரை மந்திரியாக்கினால் உன்னுடைய செங்கோல் சாயும் என்றும், மற்றொரு அரசனை மந்திரியாக்கினால் போர்கள் மட்டும் தான் நடைபெறும் என்றும், வணிகரை மந்திரியாக்கினால் அரசரின் சிறப்புகள் குன்றும் என்றும் கூறினார். ஆனால் உலக உயிர்களுக்கு அடிப்படையான உழவுத்தொழில் செய்யும் வேளாளரை மந்திரியாக்கினால் அரசு நன்முறையில் நடைபெறும் என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார். இதனை,*

***நூலெனிலோ கோல்சாய் நுந்தமரேல் வெஞ்சமராம்***
***கோலெனிலோ வாங்கே குடிசாயும் - நாலாவான்***
***மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்***
***அந்த வரசே யரசு***
***-(தனிப்பாடல் திரட்டு (ஔவையார்) - 40)***

*என்னும் ஔவையார் பாடல் விளக்குகிறது. ஆகவே, உலக உயிர்களுக்கு எல்லாம் உணவு உற்பத்தி செய்து வழங்கும் சிறப்பினையுடைய வேளாளர்களே அனைவரை விடவும் உயர்ந்தவர்கள்.*

*உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு அடிப்படையாக வேளாளர்களும் அவர்களின் வேளாண்தொழிலும் அமைகின்றது. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் உழவுத் தொழில் சரியான முறையில் நடந்தால் தான் நாட்டில் அமைதி நிலவும். உழவுத் தொழில் நடைபெறாவிட்டால் போர்த்தொழிலும் நடைபெறாது. போருக்குப் பயன்படும் படைகளின் வலிமையும் குன்றிப்போகும். -(ஏரெழுபது - 2). நாட்டிற்கு இன்றியமையாத தொழிலான உழவுத் தொழில் நடைபெறாவிட்டால் எவ்விதச் செயல்களும் நடைபெறாது என்று கூறுகிறது.*

**முடிவுகள்**

*"குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களுள் மருத நிலமானது சமவெளிப்பகுதிகளைக் கொண்ட வயலும் வயல்சார்ந்த நிலமாகும்.*

*"ஒரு நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்கள் அந்நிலத்திற்கேற்ற தொழில், இறைநம்பிக்கை, பழக்கவழக்கம், விழா போன்றவை தோன்றி மக்களின் வாழ்வில் நிலைபெறும் பொழுது பண்பாட்டுக் கூறுகளாக மாற்றம் பெறுகின்றன.*

"வயலும் வயல்சார்ந்த நிலமான மருதநிலத்தின் முதன்மைத் தொழில் வேளாண்மை என்னும் உழவுத்தொழில். இத்தொழிலைச் செய்பவர்கள் வேளாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

"வேளாண்மை என்னும் சொல்லைத் தொல்காப்பியர் உழவுத்தொழில் செய்யும் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார். பிறருக்கு உதவி செய்தல் என்னும் பொருளில் திருவள்ளுவர் வேளாண்மை என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

"கி.பி 12 ஆம் நூற்றாண்டில் வேளாண்மைத் தொழிலைப் பற்றி கம்பரால் எழுதப்பட்ட நூல் ஏரெழுபது ஆகும்.

"உழவுத்தொழிலுக்கு அடிப்படையாக அமைவது நீர்வளம். சோழ நாட்டை வளம்கொழிக்கச் செய்யும் காவிரியாறு வளம் சேர்க்கும் காவிரி, பொய்க்காமல் வரும் காவிரி என்று கம்பரால் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

"வேளாண்தொழில் செய்பவர்களை மழைமேகம் போன்ற வேளாளர்கள், உலகிற்கு உதவும் வேளாளர்கள், பெயரை நிலைக்கச் செய்யும் வேளாளர்கள் என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

"உழவுத் தொழிலுக்கு அடிப்படையாக அமையும் அலப்படை, மேழி, ஊற்றாணி, நுகத்தடி, பூட்டாங்கயிறு, கொழு, தாற்றுக்கோல், மண்வெட்டி, எருக்கூடை, நெல் அளக்கும் கூடை, அரிமிதிகோள் போன்ற உழவுத்தொழில் கருவிகள் பற்றி கம்பர் விளக்குகின்றார்.

"உலக மக்கள் பயன்பெறும் நோக்கில் வேளாளர்கள் வயலினைச் சேறாக்கி நாற்று நட்டு, களை பறித்து, எருவிட்டு, காவல் காத்து அறுவடை செய்கின்றனர்.

"வேளாளர்கள் உற்பத்தி செய்த பொருள்களுள் தரமுள்ளப் பொருள்களை விற்றுவிட்டு, கடைசியாக மீதமுள்ள பொருள்களையே பயன்படுத்துகின்றனர்.

"சிவன், திருமால், பிரம்மன் ஆகிய முப்பெரும் தேவர்கள் இவ்வுலகைக் காக்கும் வலிமையைக் கொண்டிருக்கவில்லை. அத்தகைய வலிமையைக் கொண்டவர்கள் வேளாளர்கள்.

"அந்தணர், அரசர், வணிகர் ஆகியோரின் தொழில்களுக்கு வேளாளரின் உழவுத்தொழில் அடிப்படையாக அமைகிறது.

"உயிர்களுக்குத் தேவையான உணவு உற்பத்தியைச் செய்யும் வேளாளர்களே உலகினைக் காக்கும் திறன் கொண்டவர்கள்.

"சோழர்காலத்தில் வேளாளர்களும், வேளாண் தொழிலும் முக்கியத்துவம் பெறாமல் இருந்த நிலையில் ஏரெழுபது நூல் தோன்றி வேளாளர்களின் சிறப்பினை விளக்குகின்றது.

"ஒரு நாட்டிற்கு முதுகெலும்பாக வேளாளர்களும், அவர்களின் வேளாண்தொழிலும் அமைகின்றது.

"மருதநிலத்தின் நிலவியல் பண்பாட்டின் அடிப்படையான வேளாண் தொழில், வேளாண் கருவிகள், வேளாளர் சிறப்பு, சோழர்கால வேளாளர்களின் நிலை ஆகியவற்றைப் பற்றி இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. கதிர் முருகு., (உ.ஆ), (2014), ஏரெழுபது மூலமும் உரையும், சீதை பதிப்பகம், சென்னை.
2. சுப்பிரமணியப் பிள்ளை. கா., (உ.ஆ), (2015), தனிப்படல் திரட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
3. சுப்பிரமணியன். ச.வே., (உ.ஆ), (2019), தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. தேவநேயன். ஞா., (1966), பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும், நேசமணி பதிப்பகம், சென்னை.
5. மாணிக்கவாசகன். ஞா., (உ.ஆ), (2022), திருக்குறள் எளிய உரை - இனிய உரைநடை, உமா பதிப்பகம், சென்னை.
6. மீனாட்சி சுந்தரனார். தெ. பொ., (1980), தமிழும் பிற பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. ஸ்ரீசந்திரன்., (உ.ஆ), (2004)., ஐம்பெருங்காப்பியங்கள் நான்காம் பாகம் சிலப்பதிகாரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.